**கவனிக்க.-** *01.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1762 - 2012 ජූනි මස 08 වැනි සිකුරාදා - 2012.06.08

*1762 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 666 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 669 |


**கவனிக்க.-** (i) *உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, மாச்சு 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *தென்னிலங்கை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தலைமைத்துவம் பயிற்சிப்பாடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஏப்பிறல் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2012 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிறல்- யூன்) புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2012, யூன் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஆடி மாதம் 09 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, வைகாசி 21.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | தொம்பே | கேரகல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் சியான கோரளை கிழக்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கம்பஹா |
| கம்பஹா | திவுலபிற்றிய | யட்டிகஹ வடக்குப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கப்றிகம் கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கம்பஹா |

6-276

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, ஆடி மாதம் 09 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, வைகாசி 21.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | மஹர | அக்பர் நகரப் பகுதியில் சியான கோரளை மேற்கு பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கம்பஹா |

6-277

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, யூன் மாதம் 30 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, மே 21.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | மிலானியா | யளகல பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் றைகம கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், களுத்துறை |

6-278

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ்மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2012, யூலை மாதம் 09 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2012, மே 21.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | திம்பிரிகஸ்யாய | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பகுதியில் பிறப்பு, இறப்பு (தமிழ் மொழி) வைத்திய பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், டாம் வீதி, கொழும்பு 12 |

6-441

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**சுகாதார அமைச்சு**

*மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவியல் தொழில் வல்லுனர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையில் பயிற்சிக்காக பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2012*

சுகாதார அமைச்சில் மருத்துவ சேவைகளுக்காக நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்சேவை மற்றும் துணை மருத்துவ சேவையில் கீழ்க்காணும் தொழிற் பயிற்சிக்காக தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சிக்கான காலம் | தொழிற்பயிற்சி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 2 | பௌதிக சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 3 | தொழில்சார் சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 4 | கதிரியக்கவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 5 | பொது சுகாதாரப் பரிசோதகர் | 1 1/2 வருடங்கள் வெளிக்கள பயிற்சி 06 மாதங்கள் | சிங்களம் / தமிழ்/ஆங்கிலம் |
| 6 | குடும்பநல உத்தியோகத்தர் | 1 1/2 வருடங்கள் வெளிக்கள பயிற்சி 06 மாதங்கள் | சிங்களம் / தமிழ்/ஆங்கிலம் |
| 7 | ஈ. சி. ஜி தொழில்நுட்பவியலாளர் | 01 வருடம் | ஆங்கிலம் |
| 8 | ஈ. ஈ. ஜி தொழில்நுட்பவியலாளர் | 01 வருடம் | ஆங்கிலம் |

| இல. | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சிக்கான காலம் | தொழிற்பயிற்சி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|
| 9 | பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 01 1/4 வருடம் | ஆங்கிலம் |
| 10 | மருந்தாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 11 | கண் தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 12 | பல் தொழில்நுட்பவியலாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 13 | பூச்சியியல் உதவியாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 14 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |

1. க.பொ.த. (உ.த.) இல் பெற்றுக் கொண்ட Z புள்ளிக்கமைய தயாரிக்கப்பட்ட முதன்மை அட்டவணை அடிப்படையில் 30 வீதமும் மாகாண ரீதியில் தகைமை அடிப்படையில் 70 வீதமும் தெரிவுசெய்யப்படுவர். பயிற்சிக்காக மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை அம் மாகாணத்திலுள்ள சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மற்றும் மாகாணங்களுக்குரிய வைத்தியசாலைகள், தாபனங்கள், என்பவற்றின் வெற்றிடங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

ஒரு பயிற்சிக்காக க.பொ.த. (உ.த) Z புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பல வருடங்களுக்குரிய உ.த. பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் பயிற்சிக்குத் தேவையான முழுப் பயிலுனர்களின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படுவது அனைத்து வருடங்களிலும் தகைமைகள் உள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் மொத்தத் தொகையில் அந்தந்த வருடத்திற்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளின் சதவீதத்திலாகும்.

2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிப்பதாயின் இங்கு கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் ஒரு விருப்பத் தெரிவிற்கு தயாரித்து அந்தந்த பயிற்சிக்காக தங்களது விருப்பத்தை ஒன்றிலிருந்து தொடர் இலக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அந்த விருப்பத்தின் அடிப்படையில் பயிற்சி வழங்குவதற்கு முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் முதலாவது தெரிவு செய்யப்படும் பயிற்சிக்கு இணைய வேண்டும் என்பதுடன் அவருக்கு அடுத்த பயிற்சிநெறிக்கு இணைந்து கொள்வதற்கு அல்லது வேறு பயிற்சி நெறிக்கு மாறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

3. இது ஒரு முழு நேரப் பயிற்சிநெறி என்பதால் வார நாட்கள் ஐந்துடன் சனிக்கிழமை காலை நேரத்தில் பல்கலைக்கழகம் அல்லது சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு அரசாங்கத் தாபனங்களில் அல்லது வேறு எந்த முழுநேரப் பயிற்சிநெறியில் உள்ள மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது. யாராவது அவ்வாறு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அது வெளிப்படுத்துமிடதது பயிற்சி நெறி/ பதவியில் இருந்து நீக்கப்பட்டு அதுவரை அரசாங்கத்தால் அவருக்காகச் செலவு செய்த அனைத்து செலவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகத்தில் முழு நேரப் பயிற்சி நெறியில் உள்ள ஒருவர் இதற்கு விண்ணப்பிப்பாராயின் அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் செயற்பட வேண்டும். சுகாதார அமைச்சின் கீழ் முழு நேர பயிற்சி நெறியில் பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

3.1 எந்தத் தினத்திலாவது நீங்கள் எந்தவொரு பல்கலைக்கழகத்தில் அல்லது அரச தாபனத்தில் முழுநேரப் பயிற்சிநெறிக்கு பதிவுசெய்திருப்பின் 2012.07.09 ஆந் திகதியாகும்போது அதை இரத்துச் செய்தல் வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டு விரிவுரைகளுக்குச் செல்லாது சென்றிராது இருப்பினும் நீங்கள் பல்லைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதனால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயரை பதவியிலிருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதிசெய்வதற்கும் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

3.2 2012.07.09 ஆந் திகதியாகும்போது நீங்கள் பல்கலைக்கழகத்தில் அல்லது சுகாதார அமைச்சின்கீழ் நடைபெறும் பயிற்சிநெறிக்கு பதிவுசெய்யாதவரும் குறித்த பயிற்சிநெறிக்கு பயிலுனராக இணைத்துக்கொள்ளும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதியாகும்போது பதிவுசெய்யவிருப்பின் அவர் இந்தப் பயிற்சிநெறிக்குத் தகைமையற்றவராவார்.

3.3 நீங்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் திகதி அல்லது அதற்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

**கவனத்தில்கொள்ள வேண்டியவை :**

* மேற்குறிப்பிட்ட 3.1 இலிருந்து 3.3 வரையுள்ள நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் பயிற்சிநெறிக்காக இணைத்துக்கொள்ளப்படுகிறீர்களென இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

* *அந்த 3.1 இலிருந்து 3.3 வரையிலான நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பினும் உங்களது தகைமைகள் போதியளவு இல்லாமை அல்லது இங்கு குறிப்பிட்டுள்ள வேறு நிபந்தனைகள் பூரணமில்லாதிருப்பின் எக்காரணங்கொண்டும் இப்பயிற்சிநெறிக்கு நீங்கள் தகைமையற்றவரென நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.*

* *அதேபோல் நீங்கள் போதியளவு Z புள்ளிகளைப் பெற்றுள்ளவராகவும் மற்றைய அனைத்து நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தவராக இருந்து 3.1 இலிருந்து 3.3 வரையான நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படாதவராக இருப்பின் நீங்கள் எக்காரணங்கொண்டும் இப்பயிற்சி நெறிக்கு தகைமையற்றவரென நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.*

**4. கல்வித் தகைமைகளும் பதவிக்குத் தேவையான வேறு தகைமைகளும் :**

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிநெறிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2007,2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 2 | பௌதிக சிகிச்சையாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2007,2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 3 | தொழில்சார் சிகிச்சையாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2007,2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 4 | கதிர் வீச்சாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2007,2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிநெறிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 5 | பொது சுகாதாரப் பரிசோதகர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதத்தில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | * ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்<br>* உயரம் 5 அடி 2 அங்குலம் அல்லது அதற்கு மேல் |
| 6 | குடும்பநல உத்தியோகத்தர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் இவற்றில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி | * பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்<br>* உயரம் 4 அடி 10 அங்குலமும் அதற்கு மேலும்<br>* விண்ணப்பதாரர் விவாகமாகாதவ ராகவும் பயிற்சிக் காலத்திலும் உள்ளக பயிற்சிக் காலத்திலும் நியமனம் பெறும் வரை விவாகமாக முடியாது. |
| 7 | ஈ. சி. ஜி. தொழில்-நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தி யுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங் களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 8 | ஈ. ஈ. ஜி. தொழில்-நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தி யுடன் இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவை யில் சித்தியும் | இல்லை |
| 9 | பொது சுகாதார ஆய்வுகூட தொழில்-நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் உயிரியலில் திறமைச் சித்தி யுடன் இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவை யில் சித்தியும் | இல்லை |

| இல. | பயிற்சி நெறி | க. பொ. த. (சா. த.) பெறுபேறு | க. பொ. த. (உ. த.) பெறுபேறு | பயிற்சிநெறிக்கான விசேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 10 | மருந்தாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2008, 2009 அல்லது 2010 ஆகிய வருடங்களில் ஏதாவதொன்றில் க.பொ.த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங் களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 11 | கண் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தி | 2010 ஆம் வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சை யில் பௌதிகவியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 12 | பல் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2010 ஆம் வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சை யில் இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | இல்லை |
| 13 | பூச்சியியல் உதவியாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2010 ஆம் வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சை யில் உயிரியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங் களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | * ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும் |
| 14 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி | 2010 ஆம் வருடத்தில் க. பொ. த. (உ. த.) பரீட்சை யில் உயிரியலில் திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங் களில் இரண்டில் ஒரே தடவையில் சித்தியும் | * பெண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும் * உயரம் 4 அடி 10 அங்குலமும் அதற்கு மேலும் * விண்ணப்பதாரர் விவாகமாகாதவ ராக இருக்க வேண்டும் |

**5. ஏனைய தகைமைகள் :**

(அ) 2012.07.09 ஆந் திகதயில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் ;

(ஆ) பயிற்சியின்பின் நியமிக்கப்பட்ட மாகாணத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் சேவை செய்ய விருப்பம் தெரிவித்தல் வேண்டும் ;

(இ) உடல், உள தகுதியுடன் சுகதேகியாகவும் இருக்க வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்பிக்கும் திகதிக்கு முன் மூன்று ஆண்டுகள் வசித்து வருபவராக இருக்க வேண்டும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவம் தயாரித்து, (அதற்காக ஏ4 அளவு பத்திரத்தை உபயோகிக்கவும்.) அவ்விண்ணப்பப்பத்திரத்தில் 1 இலிருந்து 10 (அ) வரை 1 ஆம் பக்கத்திலும் 10(ஆ) இலிருந்து 12 வரை, 2 ஆம் பக்கத்திலும் வரும் வகையில் தயாரித்தல் வேண்டும். பயிற்சிநெறிகள் இரண்டு அல்லது அதற்கு மேல் விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இல. 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஒரு விருப்பம் தெரிவித்தலுடன் விண்ணப்பங்கள் அனைத்தும் ஒரே கடித உறையினுள் இட்டு இங்கு (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பத்தின் முத்திரைக்குரிய இடத்தில் ரூபா 300 இற்குரிய முத்திரையினைக் கழறாத வகையில் ஒட்டி அதன் மேல் தங்களது கையொப்பமிடுவதன் மூலம் அதனை இரத்துச்செய்ய வேண்டும். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பாடநெறிகளுக்காக விண்ணப்பித்திருப்பின் அனைத்து விண்ணப்பங்களுக்கும் முத்திரை ஒட்டுவது கட்டாயமானது.

(இ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/கல்விச்சேவை/அரச கணக்காளர் சேவை/அரச பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 2,40,360 இற்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்த விண்ணப்பத்துடன் ஒரு விருப்பம் தெரிவிக்கும் படிவத்தினை இணைத்து அனைத்து விண்ணப்பங்களும் ஒரே உறையில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையில் பயிற்சிக்காக பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2012" எனக் குறித்து 2012.07.09 ஆந் திகதிக்கு முன் நிரந்தரமாக வசிக்கும் மாகாணத்தில் "மாகாண சுகாதார செயலாளர்" இற்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு மாகாண சபைக்கும் உரிய சுகாதார செயலாளரின் முகவரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :-

(1) சுகாதார செயலாளர், மேல் மாகாண சுகாதார அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
(2) சுகாதார செயலாளர், மத்திய மாகாண சுகாதார அமைச்சு, த. பெ. இல. 121, சங்கராஜ மாவத்தை, கண்டி
(3) சுகாதார செயலாளர், ஊவா மாகாண சுகாதார அமைச்சு, இல. 301, ஆர். எச். குணவர்த்தன மாவத்தை, பதுளை
(4) சுகாதார செயலாளர், வடமேல் மாகாண சுகாதார அமைச்சு, 3 ஆவது மாடி, மாகாண சபைக் கட்டிடம், குருணாகல்
(5) சுகாதார செயலாளர், வடமத்திய மாகாண சுகாதார அமைச்சு, தர்மபால மாவத்தை, அநுராதபுரம்
(6) சுகாதார செயலாளர், தென் மாகாண சுகாதார அமைச்சு, கீழ் டிக்சன் வீதி, காலி
(7) சுகாதார செயலாளர், சப்பிரகமுவ மாகாண சுகாதார அமைச்சு, புதிய நகரம், இரத்தினபுரி
(8) சுகாதார செயலாளர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, உள்துறைமுக வீதி, திருகோணமலை
(9) சுகாதார செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்

7. அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த தாபனங்களில் சேவை செய்வோர் தமது விண்ணப்பங்களை அவர்களது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் இது வெளியில் இருந்து இணைத்துக்கொள்ளல் என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றிய அறியத்தரப்பட மாட்டாது.

9. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவை அடங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளில் Z புள்ளிகளின்படி தயாரிக்கப்படும் முதன்மைப் புள்ளிகளின் ஆவணத்தினூடாகத் தெரிவுசெய்யப்படுபவர்கள் மாத்திரம் சுகாதார அமைச்சின் மற்றும் மாகாண சபைகளில் உள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் அடங்கிய நேர்முகப் பரீட்சைக் குழுவைக் கொண்ட சபைக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி Z புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் ;
(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ் மூலப்பிரதி ;
(ஈ) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திரம் (இவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்) ;
(உ) மேலே 5 (ஈ) இல் குறிப்பிட்டதற்கமைய வசித்ததற்கான கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். (கிராமசேவையாளரின் சான்றிதழ்) ;
(ஊ) தான் திருமணமாகாதவர் என்பதை நிரூபிக்க சமாதான நீதவான் ஒருவரின் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்க வேண்டும். (இவை குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கும், பாடசாலை பற் சிகிச்சையாளருக்கும் விண்ணப்பிப்பவர்களுக்கு)

12. **பயிற்சியளிக்கும் நிபந்தனை**.- (i) நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளில் இருந்து தெரிவுசெய்த விண்ணப்பதாரிகள் உரிய பயிற்சிக்கு அந்தப் பயிற்சிப் பாடசாலைகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர். பயிற்சிநெறி ஆங்கிலம்/சிங்களம்/தமிழ் மொழிகளில் கற்க முடியும்.

(ii) பயிற்சிப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளும் பயிற்சியாளர்கள் பயிற்சிப் பாடசாலைகளின் சட்டதிட்டங்களுக்கும் சுகாதார அமைச்சின் மூலம் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

(iii) பயிற்சி பெறும் காலத்திற்குள் நடக்கும் பரீட்சைகளில் சித்தியடையாது சிறந்த நடத்தையினைக் கொண்டிருக்காது இருப்பின் அல்லது பயிற்சிபெறும் பாடசாலையினால் நடாத்தப்படும் பரீட்சைகள் மற்றும் விடுமுறை சம்பந்தமான சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படியாவிடின் பயிற்சியாளர்களின் பயிற்சி எந்த சந்தர்ப்பத்திலும் கொடுப்பனவு எதுவுமின்றி இடைநிறுத்தப்படும்.

(iv) பயிற்சிக் காலத்தின்போது பயிலுனர்களுக்கு மாதாந்தம் 12,360 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும்.

(v) பயிற்சிப் பாடசாலைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் பயிற்சியைச் சிறப்பாக நிறைவு செய்வதாகவும், பயிற்சிநெறியை கைவிடுவதில்லை எனவும் அந்தப் பயிற்சியை முழுமையாக நிறைவு செய்தபின் அதற்குரிய நியமனம் கிடைக்கப்பெற்றதன்பின் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் உரிய மாகாணத்தில் அல்லது சுகாதார அமைச்சின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்கும் வைத்தியசாலைகள் அல்லது சுகாதாரத் திணைக்களத்தில் சேவை செய்வதாகவும் சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தமும் பிணையும் செய்தல் வேண்டும். பயிற்சிக் காலத்தின்போது பயிற்சியிலிருந்து விலகுவதாயின் அல்லது பயிற்சிநெறிக்கு செல்லாதுவிடின் மேலே உள்ள III ஆவது பந்தியால் குறிப்பிட்டுள்ளவாறு பயிற்சியிலிருந்து நீக்குவதற்கு ஏற்படின் அல்லது நியமனம் கிடைக்கப்பெற்று பத்து (10 வருட காலத்திற்குள் சுகாதார சேவையின் உரிய பதவியை வகிப்பதற்கு முடியாதுபோகும் சந்தர்ப்பத்தில் பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசாங்கத்தால் செலவழித்த நிதி மற்றும் பிணைக்குரிய நிதி என்பனவற்றை அவர் சுகாதாரத் திணைக்களத்திற்கு கொடுக்க வேண்டும். அவ்வாறு செலுத்தாதவிடத்து ஒப்பந்தத்தின் பிரகாரம் அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான முறை.**– பயிற்சியின் இறுதியில் நிரந்தர நியமனம் செய்தல் அரசாங்கத்தின் கட்டாயமல்ல. ஆனாலும் பயிற்சியாளர்கள் அவர்களது பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பாடநெறிக்குரிய ஆட்சேர்ப்பு சட்டதிட்டங்களுக்கு மற்றும் மாகாணத்திலுள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் உரிய பதவி III ஆம் வகுப்பிற்கு நியமிப்பது தொடர்பில் கவனம் எடுக்கப்படும். முதல் நியமனத் திகதியில் இருந்து 10 வருடத்திற்கு முதல் நியமனம் வழங்கப்பட்ட இடத்தில் சேவை செய்வது கட்டாயமாகும்.

அந்தந்த பயிற்சிநெறி முடிவில் நடத்தப்படும் இறுதி எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் மூலம் தயாரிக்கப்படும் திறமை அட்டவணை அடிப்படையில் மாகாண மட்டத்தில் 70% ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவதுடன் தீவு முழுவதிலுமிருந்து திறமை அடிப்படையில் 30% ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் என்பதை கருத்திற்கொண்டு வெற்றிடங்கள் உள்ள இடங்களில் நியமனங்கள் வழங்கப்படும்.

14. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டுபிடிக்கப்படின் பயிற்சியிலிருந்து, சேவையிலிருந்து இடைநிறுத்தப்படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப்பட்டியலில் பெயரைச் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தில் தங்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்கள், பிணைக்கான நிதி என்பவை செலுத்த வேண்டும். இல்லையேல் அதனைப் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுனர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர் பயிற்சியைத் தொடர்தல் நிராகரிக்கப்படும்.

16. மேற்கூறப்பட்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்து சட்டங்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக்காலம் ஏற்படுத்தும் அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சிநெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

18. பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குவதற்கான வசதி அமைச்சினால் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு வழங்கப்படின் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இட வாடகை மற்றும் நீர், மின் கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

19. இப்பயிற்சிக் காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனிப்பட்ட வேலைகளில் ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. அவ்வாறு பயிற்சியின்பின் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்படின் அதன்பின் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கும் உரிமை இல்லை. அவ்வாறு ஈடுபட்டால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

வைத்தியர் ரவீந்ர றுபேரு,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
''சுவசிறிபாய'',
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2012, மே 14.

**பயிற்சிநெறிக்கான விருப்பத்தை தெரிவித்தல்**

| பயிற்சி நெறி இல. | பயிற்சிநெறியின் பெயர் | விருப்பு |
|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | |
| 2 | பௌதிக சிகிச்சையாளர் | |
| 3 | தொழில்சார் சிகிச்சையாளர் | |
| 4 | கதிரியக்கவியலாளர் | |
| 5 | பொது சுகாதாரப் பரிசோதகர் | |
| 6 | குடும்பநல உத்தியோகத்தர் | |
| 7 | ஈ. சி. ஜி. தொழில்நுட்பவியலாளர் | |
| 8 | ஈ. ஈ. ஜி. தொழில்நுட்பவியலாளர் | |
| 9 | பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | |
| 10 | மருந்தாளர் | |
| 11 | கண் தொழில்நுட்பவியலாளர் | |
| 12 | பல் தொழில்நுட்பவியலாளர் | |
| 13 | பூச்சியியல் உதவியாளர் | |
| 14 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | |

ஒவ்வொரு பயிற்சிநெறி காரணமாக எனது விருப்பத்தை மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணையின் மூலம் தெரிவிக்கிறேன் என்றும், இதைத் தவிர வேறு ஒரு விருப்பு தெரிவிப்பையும் வழங்கவில்லை என்றும் இதை மாற்றிக்கொள்ள முடியாதென்றும் விருப்பத்திற்கிணங்க தெரிவுசெய்யுமிடத்தோ அல்லது அமைச்சினால் தெரிவுசெய்யப்படும் பயிற்சிநெறிக்கோ நான் செல்ல வேண்டுமென்பதையும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட சட்டதிட்டங்களை நன்கு வாசித்து அறிந்துள்ளேன் என்றும் இத்தால் உறுதிமொழி கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேசிய அடையாள அட்டை இல. : ....................................................

2012. --------------------.

**சமாதான நீதவானின் உறுதிப்படுத்தல் :**

இவ்விருப்புப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ............................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும் என் முன்னால் அவர் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
*சமாதான நீதவானின் கையொப்பம்.

* சமாதான நீதவானின் முழுப்பெயர் :----.
* விலாசம் :----.
* சமாதான நீதவானின் அலுவலக முத்திரை :----.

திகதி :----.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையில் பயிற்சிக்காக பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2012**

| பயிற்சி பாடநெறிக்குரிய குறியீட்டு இலக்கம் (வர்த்தமானி அறிவித்தலுக்கமைய) |
|---|
| |

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/தமிழில்) :----.
* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :----.

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உ-ம் : A B C SILVA :----.
   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
   (இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இல. (பிரதி இணைக்கவும்) : [ | | | | | | | | | ]

3. தபால் முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |

4. (அ) நிரந்தர முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |

(ஆ) தொலைபேசி இலக்கம் (கையடக்க) : [ | | | | | | | | | ] நிலையான : [ | | | | | | | | | ]

(இ) வசிக்கும் மாவட்டம் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா ? ஆம்/இல்லை :----.

(உ) ஆம் எனில், எப்போதிலிருந்து ? :----.

5. பிறந்த திகதி : ஆண்டு ................ மாதம் ................ திகதி ................
2012.07.09 ஆந் திகதியன்று வயது : வருடங்கள் ................ மாதங்கள் ................ நாட்கள் ................

6. உயரம் : அடி ................ அங்குலம் ................

7. ஆண்/பெண்

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூட்டில் "✓" குறியிடுக)

8. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" குறியிடுக)

9. விவாக நிலைமை : விவாகமானவர் [ ] விவாகமாகாதவர் [ ]

10. கல்வித் தகைமை :

(அ) க. பொ. த. (உ. த.) பரீட்சை (Z புள்ளியுடனான பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதிசெய்த பிரதி இணைக்க).
பரீட்சைக்குத் தோற்றிய மாவட்டம் :----.
பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு :----, சுட்டெண் :----.
Z புள்ளி :----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சை (பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதியை இணைக்கவும்) :

| | பாடம் | முதலாம் அமர்வு | | இரண்டாம் அமர்வு | |
|---|---|---|---|---|---|
| | | வருடம் | | வருடம் | |
| | | சுட்டெண் | | சுட்டெண் | |
| 1 | சிங்கள மொழி/தமிழ் மொழி | | | | |
| 2 | கணிதம் | | | | |
| 3 | விஞ்ஞானம் | | | | |
| 4 | ஆங்கிலம் | | | | |
| 5 | | | | | |
| 6 | | | | | |
| 7 | | | | | |
| 8 | | | | | |
| 9 | | | | | |
| 10 | | | | | |
| 11 | | | | | |
| 12 | | | | | |

11. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? ஆம் ☐ இல்லை ☐

(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

ஆம் எனில் தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :----.

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) என்னால் வர்த்தமானி அறிவித்தல் நன்கு வாசித்து அறியப்பட்டு அதில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு இவ்விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்ததுடன் வேறு முழுநேரப் பாடநெறிகளுக்கு சமுகமளிக்கவில்லை என்பதுடன் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் சரியானதுமாகும்.

(ஆ) கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழை அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப் படுவதிலிருந்தோ அல்லது நியமனம் பெற்றால் நியமனத்திலிருந்து எந்தவித நஷ்டஈடுமின்றி விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

முத்திரை ரூபா
300

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................................................ எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் .................................. ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

6-75

## நீதிச்சேவை ஆணைக்குழு

*நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ஆங்கிலம்) தரம் II மற்றும் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ஆங்கிலம்) தரம் II இற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012*

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) தரம் II மற்றும் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) தரம் II இற்கு சேர்த்துக் கொள்வதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதியக் கொடுப்பனவுக்குரியது.

3. **வேதனத்திட்டம்**.- மாதாந்தம் ரூ. 15,610 - 10 x 170 - 6 x 240 - 14 x 320 - 23,230 எனும் வேதனத்திட்டம் இப்பதவிக்கு உரியதாகும். இப்பதவியின் ஆரம்ப வேதனப்படி நிலை ரூ. 16,290 ஆகும்.

4. **வயது**.- விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கிடையாது.)

5. **தகைமைகள்**.- (கல்வி மற்றும் பாடநெறி).- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

சுருக்கெழுத்தாளர் - சிங்களம்/ஆங்கிலம் பதவிக்காக.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் மொழி உள்ளிட்ட 5 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுனர் மற்றும் பயிற்சி அதிகார சபை, தொழிநுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிலையமொன்றில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து (சிங்களம்/ ஆங்கிலம்) பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

தட்டெழுத்தாளர் - சிங்களம்/ஆங்கிலம் பதவிக்காக.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் மொழி உள்ளிட்ட 4 பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுனர் மற்றும் பயிற்சி அதிகார சபை, தொழிநுட்பக் கல்லூரி அல்லது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிலையமொன்றில் தட்டெழுத்து (சிங்களம்/ ஆங்கிலம்) பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. சுருக்கெழுத்தாளர் மற்றும் தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான பரீட்சைகள் வெவ்வேறாக நடாத்தப்பட்டு அப்பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கு ஏற்ப குறிப்பிட்ட புள்ளி மட்டத்தை அடைபவர்கள் வாய்மூலப் பரீட்சையின் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுவர். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பதவியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றத் தயாராய் இருத்தல் வேண்டும்.

7. **மாதிரி வினாப்பத்திரம்**.- சுருக்கெழுத்து (சிங்களம்) :

(அ) சிங்கள மொழி மற்றும் கட்டுரை
(ஆ) சிங்களத்தில் சுருக்கம் எழுதுதல் - நிமிடத்துக்கு 70 சொற்கள் வேகத்தில் 5 நிமிடங்களுக்கு வாசிக்கப்படும் பந்தியைச் சுருக்கி, அதனை நிமிடத்துக்கு 8 சொற்கள் வேகத்தில் பிரதி செய்தல்
(இ) சிங்கள தட்டச்சு - நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 30 சொற்கள் வேகத்தில் 20 நிமிடங்களுக்கு தட்டச்சு செய்தல்

வாய்மொழிப் பரீட்சை

சுருக்கெழுத்து (ஆங்கிலம்) :

(அ) ஆங்கில மொழி மற்றும் கட்டுரை
(ஆ) ஆங்கிலத்தில் சுருக்கம் எழுதுதல் - நிமிடத்துக்கு 100 சொற்கள் வேகத்தில் 5 நிமிடங்களுக்கு வாசிக்கப்படும் பந்தியைச் சுருக்கி, அதனை நிமிடத்துக்கு 10 சொற்கள் வேகத்தில் பிரதி செய்தல்
(இ) ஆங்கில தட்டச்சு - நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 30 சொற்கள் வேகத்தில் 20 நிமிடங்களுக்கு தட்டச்சு செய்தல்

வாய்மொழிப் பரீட்சை

தட்டெழுத்து (சிங்களம்) :

(அ) சிங்கள மொழி மற்றும் கட்டுரை
(ஆ) சிங்கள தட்டச்சு - நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 20 சொற்கள் வேகத்தில் 20 நிமிடங்களுக்கு தட்டச்சு செய்தல்
(இ) பொது அறிவு

வாய்மொழிப் பரீட்சை

தட்டெழுத்து (ஆங்கிலம்) :

(அ) ஆங்கில மொழி மற்றும் கட்டுரை
(ஆ) ஆங்கில தட்டச்சு - நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 40 சொற்கள் வேகத்தில் 20 நிமிடங்களுக்கு தட்டச்சு செய்தல்
(இ) பொது அறிவு

வாய்மொழிப் பரீட்சை

**குறிப்பு**.- பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கும்போது தூய்மை மற்றும் நேர்த்தி கவனத்தில் கொள்ளப்படும்.

8. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து அனுப்ப வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது நிர்வாகக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 500 இனை நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் செயலாளரின் பெயரில் மக்கள் வங்கியின் 'டாம் வீதி' கிளையின் 297 100 199 025 039 கணக்கில் வைப்பிலிட்டுப் பெற்ற வைப்புச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டவும்.

9. விண்ணப்பப்படிவங்கள் 2012.07.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வகையில் "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்பட வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக எழும் சிக்கல்கள் அனைத்திற்கும் நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

மன்ஜுல திலகரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
கொழும்பு 12,
2012, மே.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச்சேவை ஆணைக்குழு**

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (சிங்களம்/ஆங்கிலம்) தரம் II மற்றும் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ஆங்கிலம்) தரம் II இற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

(கவனிக்க.- விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் சரியாகவும், தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் நிரப்பப்படல் வேண்டும். குறித்த இலக்கங்களை உரிய கட்டங்களில் இடவும்.)

| |
|---|
| சுட்டெண் :<br>(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்) |

1. (i) பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில்) :----.
   (ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.

2. பெண்/ஆண் : பெண் - 1
   ஆண் - 2 ☐

3. நிரந்தர முகவரி :----.

4. அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி :----.

5. வசிக்கும் மாவட்டம் :----.

6. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

7. தே. அ. அ. இலக்கம் : | | | | | | | | | | |

8. (அ) பிறந்த திகதி :----.
   (ஆ) விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று வயது :

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

9. விண்ணப்பிக்கும் பதவி :

   (1) சுருக்கெழுத்தாளர் (சிங்களம்)
   (2) சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்)
   (3) தட்டெழுத்தாளர் (சிங்களம்)
   (4) தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்)

10. அரச சேவையில் பணியாற்றுபவராயின்-

   (i) அமைச்சு/திணைக்களம் :----.
   (ii) தற்போது வகிக்கும் பதவி :----.
   (iii) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
   (iv) அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி மற்றும் கடித இலக்கம் :----.
   (iv) அலுவலக முகவரி :----.

11. தகைமைகள் :

   (அ) கல்வித் தகைமைகள்.- (ஒவ்வொரு பரீட்சையினதும் பெறு பேறுகளை சுட்டெண்களுடன் வேறு வேறாக குறிப்பிடவும்.) :

   (i) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறு :

   வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

   வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

   (ii) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறு :

   வருடம் :----. சுட்டெண் :----.

| இல. | விடயங்கள் | தரம் |
|---|---|---|
| | | |

   (ஆ) பூர்த்திசெய்துள்ள பாடநெறிகள் பற்றிய விபரம் (வர்த்தமானியின் அறிவுறுத்தல் படிவத்திலுள்ள 5 ஆவது பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு நிரப்பவும்.) :----.

**குறிப்பு**.- சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் களின்படி விண்ணப்பதாரியினால் உரிய தொகையினை வைப்பிலிட்டு பெறப்பட்ட பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.

| |
|---|
| |

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும், இப்பரீட்சைக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை பின்பற்றுவதற்கு சம்மதிக்கிறேன் எனவும் உறுதியளிக்கின்றேன். மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏதேனும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது அல்லது பிழையானது என நான் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன் தெரியவருமாயின் அக்காரணத்திற்காக நான் இப்பதவிக்கு தகைமையற்றிருப்பதற்கும், இப்பதவி நியமனம் பெற்றபின் அத்தவறு தெரியவருமாயின் எவ்வித நட்டவீடும் வழங்கப் படாமல் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதனையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் பணிபுரிவதுடன் அவரினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், அவர் மேற்குறிப்பிட்ட பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுகை செய்ய முடியும்/முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோகபூர்வ முத்திரை.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

6-440